# மேல்நிலை முதலாம் ஆண்டு
# அரசு மாதிரி வினாத்தாள் 2017
## பொதுத் தமிழ் - இரண்டாம் தாள் - விடைகள்

### பகுதி – I

1. குடமுழுக்கு நிறைவடைந்தது என்றார்.
2. பெட்டிக்கடையிலே வெற்றிலைக்குச் சுண்ணாம்பு கேட்டு வா.
3. மழைநீர் சேமிப்பை அனைவரும் செயல்படுத்த வேண்டும்.
4. பேருந்து நிறுத்துமிடத்தில் மக்கள் கூடினர்.
5. பனந்தோப்பில் ஆந்தை அலறுவது கேள்.
6. அலை - கடல் அலை அழை - கூப்பிடு
7. சற்றுநேரம் அமருங்கள். வந்து விடுகிறேன்.
8. குழந்தைத் திருமணம் அரசால் தடை செய்யப்பட்டது.
9. இ.ஆ.ப விரிவாக்கம் - இந்திய ஆட்சிப் பணி
10. பள்ளியில் மணி ஒலித்தது.
11. மாணவர்களே! “புதிய கல்வி முறையைப் பின்பற்றுங்கள்” என்றார் ஆசிரியர்.
12. மாணவர்கள் நூலகங்களை நாடிச் செல்ல வேண்டும்.
13. அமிழ்தம் போல் பொழிந்த மழை கண்டு மக்கள் மகிழ்ச்சி அடைந்தார்கள்.
14. ஊன் - மாமிசம் ஊண்- உணவு
15. இரவு பகல் பாராது படித்தேன். தேர்ச்சி பெற்றேன்.
16. வெல்லம் - இனிப்பு வெள்ளம் - அதிகப்படியான நீர்
17. ஏரிகளில் மழைநீர் சேமித்தால் கிணறுகளில் நீர் வற்றாது.
18. பாரியின் ஆருயிர் நண்பர் யார்?
19. இலக்கிய சுவை: அவலச் சுவை
20. நானிலம் - குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல்

### பகுதி-II

**21. ஔவையார் கல்வியின் சிறப்பாக கூறுவது என்ன?**

- கல்வியே அழியாச்செல்வமாகும்.
- மன்னரைக்காட்டிலும் கற்றவரே சிறப்புடையவர்.
- மன்னரைத் தன் நாட்டில் மட்டுமே உயர்ந்தோராக போற்றுவர்.
- ஆனால் கற்றவரைச் செல்லும் இடமெல்லாம் மதித்துப் போற்றுவர்.

**22. பொருட்சுவை எத்தனை? அவை யாவை?**

- பொருட்சுவை 9 வகைப்படும்.
- 1. நகை 2. அவலம் 3. இழிப்பு 4. வியப்பு 5. அச்சம்
  6. வீரம் 7. வெகுளி 8. உவகை 9. சமநிலை

**23. பட்டினத்தடிகள் போற்றிய மூவர் யார்?**

- பெற்ற பிள்ளையை வாளாலரிந்து இறைவனுக்கு இன்னமுது ஊட்டியவர் - சிறுத்தொண்டர்
- மனையாள் வைத்த ஆணை கடவாது இளமையிலேயே ஐம்பொறிகளை வென்றவர் - திருநீலகண்டர்
- ஆறாத அன்பினால் தன் கண்ணைப் பறித்து இறைவன் கண்களில் அப்பியவர் - கண்ணப்பர்

**24. தொ.பொ.மீனாட்சி சுந்தரனார் இளமையில் கேட்டதாகக் கூறும் கதைகள் யாவை?**

- விக்கிரமாதித்தன் கதை
- மதன காமராசன் கதை
- திருவிளையாடல்கள்
- நளன் கதை
- அரிச்சந்திரன் கதை
- துரியோதனன் கதை
- இராமர் கதை

**25. மனதிற்குத் தெம்பு தரும் செயல்களாக அறிஞர் அண்ணா கூறுவது யாவை?**

- சிங்கார ஓடை அதிலே பூத்துக்கிடக்கும் மலர்
- கரையினிலே ஓங்கிவளர்ந்த மரம், அதிலே குலுங்கிடும் கனி
- கனியைக் கொத்திடும் கிளி, அதனை ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டிருக்கும் அணில்

**26. சமயம் என்ற சொல்லின் பொருள் ஆழத்தைக் குன்றக்குடி அடிகளார் எவ்வாறு கூறுகிறார்?**

- மனித உள்ளங்களை இன்ப அன்பின் விளைநிலமாகத் தகுதிப்படுத்திப் பக்குவபடுத்தும் தத்துவத்தின் வாழ்க்கை முறைக்குச் சமயம் என்று பெயர்.
- மனித வாழ்க்கையைச் சமைத்து பக்குவபடுத்துவதே சமயத்தின் நோக்கம் ஆகும்.

**27. "நடுகல்" என்பது யாது?**

- பகைவர் முன்னின்று ஆற்றலோடு போர்புரிந்து உயிர் துறந்த வீரர்களை நினைவுகூர்தற் பொருட்டு அவர்கள் இறந்த இடங்களில் அல்லது அவர்கள் தொடர்புடைய இடங்களில் நடுகல் அமைத்து விழா நடத்தி பாராட்டுதல்.
- இது பழங்காலத்தில் தமிழ்மக்கள் கைக்கொண்டிருந்த பழக்கமாகும்.

**28. குடும்பத்தலைவியின் முதற்கடமை என்று ஆசிரியர் கூறுவது யாது?**

- அலுத்து வந்த ஆருயிர் கணவனுக்கு அறுசுவை உணவளித்து மகிழ்வது குடும்பத்தலைவியின் முதற்கடமையாகும்.
- தான் சமைத்ததை இனிது! இனிது! எனக்கணவன் சுவைத்து உண்பதைக் கண்டு மனைவி மனம் மகிழ்வாள்.

**29. "சமநிலை" குறித்து ந.மு.வேங்கடசாமி நாட்டார் கூறுவது யாது?**

- பொருட்சுவை ஒன்பதில் சமனிலையாவது சாந்தம்.
- ஐம்பொறியும் அடக்கப்பெற்றுப் பிறர் வையினும் வாழ்த்தினும் தாளில் வணங்கினும் மனந்திரியாது அவற்றைச் சமமாகக் கொண்டு நிற்கும் நிலைமையாகும்.

**30. பண்டைய தமிழக மக்களின் இறைவழிபாட்டு முறையை நெடுநல்வாடை எவ்வாறு குறிப்பிடுகிறது?**

- சிவன், திருமால், குமரவேள், புத்தர் ஆலயங்கட்குச் சென்று வழிபட்டனர்.
- வீட்டிலும் மாலையில் மல்லிகை மலர்ந்ததும் விளக்கினையே நெல்லும் மலருந்தூவி வழிபட்டனரென நெடுநல்வாடை கூறுகிறது.

## பகுதி – III

**31. அழியாச் செல்வமாகிய கல்வியைப் பயன்படுத்தும் முறை யாது?**

- அழியாச் செல்வமாகிய கல்வியைப் பெற்றுக்கொள்வதற்கு நாம் முயலுதல் வேண்டும்.
- உயர்ந்த நூல்களில் சொல்லப்பட்டுள்ள நல்லொழுக்கங்களை நாம் பழகி வருதல் வேண்டும்.
- நாம் சிறிதும் பெருமை பாராட்டாமல் பணிவான சொல்லும் பணிவான செயலும் உடையவராய் இருத்தல் வேண்டும்.
- எல்லா உயிர்களிடத்தும் அன்பும் இரக்கமும் காட்டல் வேண்டும்.
- நல்லொழுக்கத்தில் வழுவாதவராய் இருத்தல் வேண்டும்.
- உலக வாழ்க்கையை இனிது நடத்தி நாமும் பயன்பெற்று பிற உயிர்களையும் பயன்பெறச் செய்ய வேண்டும்.
- இவையே நாம் பெற்ற அழியாச் செல்வமாகிய கல்வியைப் பயன்படுத்தும் முறை என்று மறைமலையடிகளார் கூறுகிறார்.

**32. கங்கைவேடனும் காளத்தி வேடனும் இறைவனுக்கு அளித்த நன்கொடைகள் யாவை?**
**கங்கை வேடன்:**

- வடநாட்டுக் கங்கைக் கரையிலே பிறந்தவன் கங்கைவேடன் குகன்.
- குகன் தனக்கினிய கங்கையாற்று மீனையும் கொம்புத்தேனையும் எடுத்துக் கொண்டுச் சென்றான்.
- குகனது மனப்பான்மையை அறியாதவராய் இருந்த விருத்தமாதவரின் மனத்தில் இருந்த கருத்தை இராமன் தெருட்டியருளினான்.

**காளத்தி வேடன்:**

❖ தமிழ்நாட்டு காளத்தி மலையிலே தோன்றியவன் கண்ணப்பன்.
❖ தனக்கினிய இறைச்சியே தன் தலைவனாகிய இறைவனுக்கும் இனியதாகும் என்று எண்ணி அதனை எடுத்து ஊட்டியவர் காளத்தி நாதனாகிய கண்ணப்பன் ஆவார்.

**33. மெய் கீர்த்தி – குறிப்பு வரைக.**

❖ மெய்கீர்த்தி முதல் இராசராசசோழனால் கி.பி 893-ம் ஆண்டு முதலில் தொடங்கப்பட்டது.
❖ மெய்கீர்த்தி என்பது காலக்குறிப்புகள், ஆட்சியாண்டு வரும் முறை, வீரச்செயல், சிறப்புப்பெயர்கள் போன்றவைகளைக் கல்வெட்டுகள் அமைத்து வரையும் முறையே ஆகும்.
❖ அரசனுடைய ஆட்சியாண்டு ஏற ஏற மெய்கீர்த்தியும் புதிய புதிய செய்திகளோடு வளர்ந்து கொண்டே போகும்.
❖ மெய்கீர்த்தியின் துணைக்கொண்டு ஒவ்வொரு வேந்தருடைய ஆட்சியிலும் எந்த ஆண்டில் எந்த எந்த நிகழ்ச்சிகள் நிகழ்ந்தன என்பதை அறிந்து கொள்ளலாம்.
❖ ஆகவே மெய்கீர்த்திகளோடு அமைந்த கல்வெட்டுகள் எல்லாம் வரலாற்று ஆராய்ச்சிக்குச் சிறந்த ஆதாரங்களாக இருத்தல் உணர்தற்பாலதாகும்.

**34. ஓய்வு நேரம் ஒவ்வொரு நாட்டிலும் எவ்வாறு அமைந்துள்ளது?**

ஓய்வு நேரம் ஒவ்வோர் நாட்டிலும் ஒவ்வோர் காலத்தில் ஒவ்வொருவிதமாக அமைந்துள்ளது.

❖ **ரோம் நாட்டவர்கள் ஓய்வு:**
 * மற்போர், வாட்போர் செய்து ஆற்றலைக் காட்டிடும் வீர விளையாட்டுகளைக் காண்பது.
 * வீரர்கள் மிருகங்களுடன் போரிட்டு அவைகளைக் கொல்வது அல்லது அவைகளால் கொல்லப்படுவது என்ற இரக்கமற்ற விளையாட்டுகளைக் காண்பதனை உல்லாசமளித்திடும் ஓய்வாகக் கருதினர்.

❖ **கிரேக்க நாட்டவர்கள்:**
அறிவுச் செல்வத்தைப் பெற்றுத் திகழ்ந்த கிரேக்கர்கள் ஓய்வு நேரத்தைக் காப்பியம் என்ற தரம் பெற்ற புதிய நாடகங்களைக் காண்பதிலும் கருத்துப் பெறுவதிலும் ஓய்வு நேரத்தைச் செலவிட்டனர்.

❖ **ஸ்பெயின் நாட்டவர்கள் ஓய்வு:**
முரட்டுக் காளையுடன் போரிடுவது ஸ்பெயின் நாட்டவர்க்கு வீரவிளையாட்டு, ஓய்வு நேரத்தின் பெரும்பகுதியை அவ்வாறே செலவிட்டனர்.

❖ **பழந்தமிழர்களின் ஓய்வு:**
ஏறுதழுவுதல், மற்போர் போன்ற வீர விளையாட்டிலே நேரத்தைச் செலவிட்டனர்.

❖ **இங்கிலாந்து நாட்டவர்கள் ஓய்வு:**
கோழிச்சண்டை, கரடிச்சண்டை போன்ற போட்டிகளை நடத்தி ஓய்வுநேரத்தில் பொழுது போக்கினர்.

**35. “சமயங்களின் ஒருமித்த குரல்” என, குன்றக்குடி அடிகளார் கூறுவன யாவை?**

❖ உலகில் நிலவும் எல்லா சமயங்களும் மனித குலத்தை இன்ப அன்பு கலந்த அணைப்பில் ஒரு குலமாக்க முயலுகின்றன.
❖ மனித குலம் ஒன்று என்பதே பொது நீதி, இடையில் நிலவும் வேறுபாடுகள், வேடிக்கை மனிதரின் விளையாட்டு அமைப்புகளே ஆகும்.
❖ சமயங்களின் ஒருமித்த குரல் அன்பு காட்டு, உதவி செய், பகையை மற, பண்பு பாராட்டு, அன்புப் புனலால் தனது மாற்றார் மனம் ஆகியவைகளைக் குளிப்பாட்டு.
❖ உயிர் வர்க்கத்தின் மகிழ்ச்சிப் புனலால் எல்லாம் வல்ல இறைவனின் திருப்பாதங்களைக் குளிப்பாட்டுங்கள் என்பதேயாகும்.

**36. சிலாசாசனங்கள் எனப்படுவன யாவை?**

❖ கோயில்களின் உள்ளே சென்று கருவறையில் எழுந்தருளியுள்ள இறைவனை வணங்கி, அதனை சூழ்ந்துள்ள பிரகாரத்தைச் சுற்றி வரும் போது கருங்கற் சுவர்களின் மேல் வரிசை வரிசையாக எழுத்துகள் வரையப்பட்டிருக்கும்.
❖ அவ்வெழுத்துகள் சிற்றுளி கொண்டு கல் தச்சர்களால் பொறிக்கப்பட்டனவாகும்.
❖ அவை கல்வெட்டுகள் எனவும் “சிலாசாசனங்கள்” எனவும் கூறப்படுகின்றன.
❖ பழங்காலத்தில் அந்த எழுத்துகள் புரியாததனால் தேவர்கள் தம் தெய்வ மொழியில் வரைந்து வைத்திருத்தல் வேண்டும் எனக்கூறி வந்தனர்.

**37. பண்டைய தமிழக மகளிரின் விருந்தோம்பல் பண்பினை விளக்குக.**

- ❖ வீடு தேடி வரும் விருந்தினர்க்கு வயிறார உணவளித்து, உடலாற உறைவிடங்கொடுத்து உள்ளங்குளிர புன்முறுவல் பூத்து இனியவை கூறி விருந்தளிப்பதே பண்டைய தமிழக மகளிரின் முதற்கடமை.
- ❖ விருந்தோம்பலே இல்லறத்தாரின் இன்றியமையா கடமையாய் விளங்கியது.
- ❖ வறுமையில் வாடியவருங்கூட குப்பைக்கீரை கொய்து உப்பில்லாமல் அட்டேனும் விருந்தோம்பினர் எனப் பழம்பாடல் கூறும்.
- ❖ இல்வாழ்வாளின் இனிமையான கடமைகளுக்குள்ளே விருந்தோம்பல் மிகவும் சிறப்பானது ஆகும்.
- ❖ ஒல்காப்புகழ் தொல்காப்பியனாரும் விருந்தோம்பலைத் தலைவன் தலைவியர்க்குள்ளே ஊடல் தீர்க்கும் வாயில்களுள் ஒன்றாக குறித்தார்.

**38. முதுகுடிப்பிறந்த மகளிருக்கும் வீரவுணர்ச்சி மிருந்திருந்தது என்பதைச் சான்றுடன் நிறுவுக.**

❖ **மூதின் முல்லை இலக்கணச் செய்யுள் கூறுவது:**

* ஆடவரைப்போல் முதுகுடி மகளிர்க்கும் மறமாகிய வீரவுணர்ச்சி உண்டு என்பதையே,
* "அடல்வேல் ஆடவர்க் கன்றியும் அவ்வில்
  மடவரல் மகளிர்க்கும் மறம்மிகுத் தன்று" என்று மூதின் முல்லை குறிக்கும்.

❖ **புறநானூறு குறிப்பிடுவது:**

* கணவனும் தமையனும் களத்தில் இறக்க, மைந்தனைப் போர்க்கோலம் புனைவித்துப் போருக்கு அனுப்பிய தாயின் வீரமும்,
* நரை மூதாட்டி தன் முதுமைப்பருவத்து அருமையாய் பெற்ற ஒரு தனி மகனும் போரிலிறக்க வருந்தாது, ஈன்ற ஞான்றினும் பெரிதும் மகிழ்ந்த தாயின் வீரமும் இப்படல்களிற் பொலிந்து தோன்றும்.

❖ **குறுந்தொகை பாடல் குறிப்பிடுவது:**

* வீட்டிலும் நாட்டிலும் புகழுடன் பொலியும் மகளிர் மனைவியராய் வாய்ப்பதையே பெரும் பேறாகக் கருதினர் என்னும் கருத்து குறுந்தொகை பாடலில் கூறப்பட்டுள்ளது.

**39. பழந்தமிழர் வாய்ப்பந்தல் போடவில்லை என்பதை தொ.பொ.மீனாட்சி சுந்தரனார் எவ்வாறு மெய்ப்பிக்கிறார்?**

- ❖ பெரியோரை வியத்தலும் இலமே, சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே என்று பழந்தமிழன் பாடியுள்ளது நினைவிற்கு வருகிறது.
- ❖ இப்பழந்தமிழன் வாய்ப்பந்தல் போடுகிறானா? உண்மையைத்தான் கூறுகிறானா? எண்ணித்தான் பார்ப்போமே! எடுத்துக்காட்டாக சிலப்பதிகாரத்தில்,
- ❖ பாண்டியன் நெடுஞ்செழியன் அரசக்கட்டிலில் வீற்றிருக்கிறான். கண்ணகி முன்னே அவன் உயிர் விடுகின்றான். ஆனால் அவன் கதையும் அன்று.
- ❖ சேரன் செங்குட்டுவன் வடநாட்டில் போர் புரிகிறான். கண்ணகிக்குக் கோயில் கட்ட இமயத்திலிருந்து கல் எடுத்து வருகின்றான். ஆனால் அவன் கதையும் அன்று.
- ❖ முரசு முழங்குதானை மூவரும் கதையில் வந்தும் அந்த முடிமக்கள் கதையாகச் சிலப்பதிகாரம் விளங்கவில்லை.
- ❖ குடிமக்களில் ஒருவர் கதை. அதிலும் ஒரு பெண்ணின் கதை. கண்ணகியின் கதையன்றோ சிலப்பதிகாரம்!
- ❖ கோவலன் குடிமக்களுள் ஒருவன். மாதவி பரத்தையரில் ஒருத்தி. இவர்களின் சிக்கல் வாழ்க்கையே சிலப்பதிகார சித்திரம்.
- ❖ இவ்வாறாக சிலப்பதிகார காப்பியத்தின் எளிய குடிமக்களையும் தலைவன் தலைவியாக்கி தமிழன் வீரத்தை மெய்ப்பித்துக் காட்டியதால் பழந்தமிழன் வாய்ப்பந்தல் போடவில்லை என்று தொ.பொ.மீனாட்சி சுந்தரனார் மெய்ப்பிக்கிறார்.

**40. சிலப்பதிகாரம் குடிமக்கள் காப்பியமே! - காரணம் தந்து விளக்குக.**

❖ **உலகம் முழுவதும் கதை என்றால் முடிமக்கள் கதை தான்:**

* வடமொழியில் ஆதிகாவியம் என்று புகழப்பெறுவது வான்மீகியின் இராமாயணமே. அது அரசக்குமாரர்கள் கதை.
* கிரேக்க பழங்காப்பியம் எனப்பாராட்டப்படுவது ஹோமர் எழுதிய இலியட்,

* மெனலஸ் என்ற அரசர் பெருமானின் அழகிய மனைவியாம் ஹெலன் பெருமாட்டியைப் பாரிஸ் என்ற இலிய நாட்டு இளவரசன் சிறை எடுத்ததால் மூண்ட போரினைப்பாடுவது.
* இவ்வாறு எந்த நாட்டு பழங்காப்பியத்தினை ஆராய்ந்தாலும் அரசர் அல்லது வீரரது வரலாற்றினையே பாடி புகழக் காண்கிறோம்.

❖ **சிலப்பதிகாரம் முடிமக்கள் கதையாய் இல்லாமல் குடிமக்கள் கதையாய் உள்ளது:**

* குடிமக்கள் வழியாகவே தமிழ்நாட்டின் ஒருமை ஓங்கி வளரக் காண்கிறார் இளங்கோவடிகள்.
* சிலப்பதிகாரத்தில் சோழன் கரிகாலன் வருகிறான். ஆனால் அவனுடைய கதை அன்று.
* பாண்டியன் நெடுஞ்செழியன் உயிர்விடுகின்றான். ஆனால் அவன் கதையன்று.
* சேரன் செங்குட்டுவன் வடநாட்டில் போர் புரிகிறான். கண்ணகிக்குக் கோயில் கட்ட இமயத்திலிருந்து கல் எடுத்து வருகின்றான். ஆனால் அவன் கதையும் அன்று.
* இவ்வாறாக கண்ணகி, கோவலன் என்ற எளிய குடிமக்களைக் காப்பியத் தலைவர்களாக்கி நாடகம் படைத்தமையால் சிலப்பதிகாரம் குடிமக்கள் காப்பியமே ஆகும்.

## பகுதி - IV

**41. ஒருநாள் கழிந்தது – புதுமைப்பித்தன்**

**குறிப்புச்சட்டகம்**

1. முன்னுரை
2. முருகதாசரின் குடும்பம்
3. மனைவியின் வேண்டுகோள்
4. சுப்பிரமணியத்தின் வருகை
5. அலமுவின் அலம்பல்
6. கடன்கேட்டல்
7. நாளை கதையை நாளை பார்ப்போம்
8. முடிவுரை

**கதை மாந்தர்கள்**

1. முருகதாசர்
2. கமலம் (மனைவி)
3. அலமு (மகள்)
4. சுப்பிரமணியம்
5. கடைக்காரன்
6. ரிக்ஷாக்காரன்
7. பங்கஜம்
8. சுங்காம்

**கதைக்கரு : புலமையும் வறுமையும் இணைந்தே வாழும்**

**(அல்லது)**

**41. மறுமணம் - விந்தன்**

**குறிப்புச்சட்டகம்**

1. முன்னுரை
2. திருமண பந்தம்
3. பிரிவின் ஏக்கம்
4. குடும்பத்தில் வெறுப்பு
5. சீதாவின் நல்ல உள்ளம்
6. அம்மாவின் அவசியம்
7. மறுமண எண்ணம்
8. சீதாவின் முடிவு
9. முடிவுரை

**கதை மாந்தர்கள்**

1. கதாநாயகன்
2. சீதா
3. கதாநாயகனின் அம்மா
4. சீதாவின் அம்மா
5. ரகு
6. ராதை
7. சங்கரன்

**கதைக்கரு : இருமணம் அல்ல திருமணம். ஒரு மனமே திருமணம்**

**42. பிரமுகர் - ஜெயகாந்தன் (நாடகம்)**

**காட்சி-1**
இடம் : கிராமத்தின் சாலையில் உள்ள வேலமரத்தடி
காலம் : மாலை
பங்குபெறுவோர் : கட்டெறும்பு, சிற்றெரும்பு, மனிதர்கள்

**காட்சி-2**
இடம் : வேலமரத்தடி
காலம் : அந்திசாயும் நேரம்
பங்குபெறுவோர் : கட்டெறும்பு, மக்கள் கூட்டம்

**காட்சி-3**
இடம் : வேலமரத்தடி
காலம் : அந்தி மாலை
பங்குபெறுவோர் : கட்டெறும்பு, சாலையைக்கடந்து செல்லும் மக்கள்

**கதைக்கரு: சிறிய புத்தி உள்ளவனுக்கு உலகம் தனக்குத் துன்பம் தரும்போது பெரியதாகவும், இன்பம் நேரும்போது சிறியதாகவும் தோன்றும்.**

**(அல்லது)**

**42. செங்கமலமும் சோப்பும் - சுந்தர ராமசாமி (உரையாடல் சொந்தமாக அமைத்துக் கொள்க)**

**கதை மாந்தர்கள்**

1. செங்கமலம்
2. கௌரிக்குட்டி
3. சோப்பு
4. கிருமிகள்

**கதைக்கரு: ஏதிலார் குற்றம் பார்க்கின் தன் குற்றம் மறந்தே போகும்.**

**43. அனுமதி - சுஜாதா**

**குறிப்புச்சட்டகம்**

1. முன்னுரை
2. ஆசிரியர்குறிப்பு
3. கதைமாந்தர்கள்
4. பாலாஜி
5. தந்தையின் எண்ணம்
6. தேர்வைப் பற்றி பாலாஜியின் சிந்தனை
7. அன்னை மகாலெட்சுமி
8. தந்தையின் முறையீடு
9. இராமதுரையின் கோபம்
10. அனுமதித் தேர்வு வினாத்தாள்

**கதை மாந்தர்கள்**

1. இராமதுரை - பாலாஜியின் தந்தை
2. மகாலெட்சுமி - பாலாஜியின் அம்மா
3. பாலாஜி
4. ரமேஷ் - பாலாஜியின் மாமா
5. விஷ்ணுமூர்த்தி - இராமதுரையின் மேலதிகாரி

**கதைக்கரு : நேர்மையே உயரிய கொள்கை. முயன்று உழைத்துப் பெறும் பதவியே உயர்ந்த பதவி.**

**(அல்லது)**

**43. கரையும் உருவங்கள் - வண்ண நிலவன்**

**குறிப்புச்சட்டகம்**

1. முன்னுரை
2. ஆசிரியர் குறிப்பு
3. சங்கரன்
4. இரவில் வீடு திரும்புதல்
5. செருப்பு அறுந்தது
6. வீட்டை அடைதல்
7. உணவு சாப்பிட மறுத்தல்
8. ஊஞ்சல் நினைவு
9. வேலைக்கு அலைதல்
10. அக்காவின் அறிவுரை
11. கரையும் உருவங்கள்

**கதை மாந்தர்கள்**

1. சங்கரன்-வேலை தேடி அலையும் இளைஞன்
2. சங்கரனின் தம்பி
3. சங்கரனின் அக்கா
4. சங்கரனின் அப்பா
5. சங்கரனின் நண்பன்
6. ஆறுமுகம்-சங்கரனின் மாமா

**கதைக்கரு : வேலை இல்லாத இளைஞனின் மனநிலை, தன் உழைப்பில் உண்ணும் சிறந்த எண்ணம்**

**44. சொந்தமாக தயாரித்து கொள்க. (கற்பனை கலந்த கதை)**

**45. ஆசிரியர் குறிப்பு:**

| | | |
|---|---|---|
| பெயர் | : | கவிஞர் வெ. இராமலிங்கனார் |
| ஊர் | : | நாமக்கல் மாவட்டம் மோகனூர் |
| பெற்றோர் | : | வெங்கட்ராமன் - அம்மணி அம்மாள் |
| காலம் | : | கி.பி 1888 முதல் 1972 வரை |
| சிறப்பு | : | தமிழக அரசின் முதல் அரசவைக் கவிஞராகத் திகழ்ந்தவர். இவருக்கு நடுவணரசு பத்மபூஷண் விருது வழங்கி சிறப்பித்தது. இவர் காந்தியக்கவிஞர் எனவும் வழங்கப்படுகிறார். |

**திரண்ட கருத்து:**

ஆசிரியர் தாயைபோல அன்பு காட்டுபவர். தந்தை போல் நம்மிடத் பாசமாக பேசி சிறந்த அறிவுரைகளைக் கூறுபவர். நல்ல பழக்கவழக்கங்களை கற்றுக்கொடுத்து தானும் அதுபோல் வாழ்ந்து காட்டுபவர். இவ்வாறு பல நல்ல குணமுள்ள ஆசிரியரே ஆசான் என்று அழைப்பதற்கு உரியவர் ஆவார்.

**மையக்கருத்து:**

இக்கவிதையில் ஆசிரியரின் மேன்மை பற்றி கூறப்பட்டுள்ளது. உலகில் தாய், தந்தை, நண்பனாக இருந்து வழி நடத்துபவர் ஆசிரியர் ஒருவரே என்பது இப்பாடலின் மையக்கருத்து ஆகும்.

**(அல்லது)**

**எதுகை நயம் :**

**எது கைகொடுக்காவிட்டாலும் புலவருக்கு**

**எதுகை கைகொடுக்கும்**

பாடலில் அடிகள் தோறும் இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகை. இப்பாடலில் கீழ்க்கண்ட சொற்கள் எதுகையாக வந்துள்ளது

| | | | |
|---|---|---|---|
| நீலத், மாலவன், கல்வி, பலவித | - ல வரிசை | நின்று, குன்றம், மனம் | - ன வரிசை |
| நித்தம், சாத்திரத்தின் | - த வரிசை | தவஞ்செய், இவற்றிடையே | - வ வரிசை |
| குமரி எல்லை, தமிழ்நாடு, கம்பன் | - ம வரிசை | சிறந்த பிறந்த | - ற வரிசை |

**மோனை நயம் :**

**குயவனின் கைவண்ணம் பானையிலே. புலவனின் கைவண்ணம் மோனையிலே**

அடிகள்தோறும் முதலெழுத்து ஒன்றி வரத்தொடுப்பது மோனை எனப்படும். இப்பாடலில் அடிமோனை பின்வருமாறு சீர் மோனை அமைந்துள்ளது.

**நி**ன்று - **நி**த்தம், குமரி - **கு**ன்றம், **க**ல்வி - **க**ம்பன்

**இயைபு நயம் :**

பாடலில் இறுதி எழுத்தோ இறுதிச் சீரோ ஒன்றி வருவது இயைபுநயம் ஆகும். இப்பாடலிலும் **தமிழ்நாடு** என்னும் சீரானது அடிதோறும் கடைசிச் சீராக வந்துள்ளது. அது கவிதையைப் படிப்பவர்க்கு ஓசையின்பம் பயக்கிறது.

சந்த நயம்:

**சந்தம் பாட்டிற்குச் சொந்தம்**

பாரதியாரின் இப்பாடல் ‘சிந்து’ என்னும் இசைப் பாட்டு வகையைச் சார்ந்தது.

அணி நயம்:

**அணியில்லாக் கவிதை**
**அழகில்லா வனிதை**

தமிழ்நாட்டின் எல்லை என்பது குமரி முதல் மாலவனாகிய திருமால் அருளும் திருவேங்கம் வரை உள்ளது. இச்செய்தி இயல்பான ஒன்றே. இவ்வாறு இயல்பான செய்தியை கவிஞர் கூறியுள்ளதால் இக்கவிதையில் இயல்பு நவிற்சி அணி பயின்றுள்ளது.

46. வரும் முன் காப்போம்
வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் (சொந்தமாக தயாரித்து கொள்க)

**(அல்லது)**

**46. மரபுக்கவிதை (அ) புதுக்கவிதை:**

| இயற்கை | மனித நேயம் |
|---|---|
| வானம் இயற்கை வனங்கள் இயற்கை | மறைந்ததே மனிதநேயம் மண்ணிலே இன்று! |
| காற்றும் இயற்கை கடல்கள் இயற்கை | மறந்ததே இச்சொல்லும் மனதிலே இன்று! |
| மழையும் இயற்கை மலைகள் இயற்கை | பேரிடர் நிகழ்ந்தால் தான் ஓடிவரும் நிலையிங்கு! |
| ஞாயிறும் இயற்கை திங்களும் இயற்கை | பெரும்பான்மை நேரங்களில் ஒதுங்கியே இருப்பதிங்கு! |
| வெயிலும் இயற்கை பனியும் இயற்கை | அபிமானம் என்பதுமின்று அந்நிய சொல்லானதே! |
| கார்முகில் இயற்கை கடுங்குளிர் இயற்கை | மனிதனே மனிதனின்று மதிப்பதும் இல்லையே! |
| இணைந்து வாழ்ந்தால் இதந்தரும் இயற்கை | உணர்ந்திடுவீர் உலகோரே மாற்றிடுவீர் உள்ளத்தை |
| எதிர்த்து நின்றால் பேரிடர்தரும் இயற்கை | உரைத்திடுவீர் உலகிற்கும் மறவாதீர் செயலாற்ற! |

**47. தமிழாக்கம் தருக.**

அ) சிறுதுரும்பும் பல்குத்த உதவும்.
ஆ) எவ்விடமும் கலைஞர் வாழ்கிறார்.
இ) எண்ணிப் பேசு
ஈ) நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்
உ) அரசன் எவ்வழி, குடிமக்கள் அவ்வழி

**(அல்லது)**

அ) கல்வியானது நன்மதிப்புகளை உருவாக்கி ஊக்குவிப்பதாக இருக்கவேண்டும்.
ஆ) தேர்வு முடிவுகளை உங்கள் செல்லிடப்பேசி மூலம் உறுதிப்படுத்திக் கொள்ளவும்.
இ) மாணவர்கள் கணினி படிப்புகளில் சேர வேண்டும்.
ஈ) அரசாங்கம் சில திட்டங்களை அறிவித்தது.
உ) நல்ல மக்கள் உள்ள உலகம் நல்லதாகவே தோன்றும்.

**தயாரிப்பு**
**திரு.செல்வேந்திரன் முதுகலை பட்டதாரி ஆசிரியர்**
**அரசு மேல்நிலைப்பள்ளி, மூவானூர், திருச்சி**
**மற்றும்**
**வெற்றிக்கு வழி ஆசிரியர் குழுவினர்**